When life sans brain wallowing languisheth,
Affording it Kāla and Niyati
And then lifting it up to the abode –
At navel – Turiya–, providing there
The Air vital, together with Kāla
Vidhya and Arāga, by the help of which
Are dimly illumined Deed and knowledge
And Desire, and then causing it to be
Soused in Gunas three from Mān arising,
And raising it with endowed Chittha
To the Suzhuti abode of Bosom
Where it doth remain perplexed, unable
To discern and distinguish things perceived
With the help of Chittha, whence lifting it
To the Swapna abode of Throat and there
Granting all organs save the Five of Knowledge
And the Five of Action, thus causing it
In that state of Dream to eat of the results
Of two-fold deeds in order due; and then
In the court of Jāgra, the forehead, when life
With all organs equipped rules, like brightening
A house with lighted lamp, granting the four
Subtle types of Speech unto it to save
In sooth 'life', from the murk of Ānava
The Righteous One doth cause it to function;
May That Righteousness, us protect. (103)

The Accomptant

The ens

Unaware of the eternal help of God
For ever seeking to quench the fire of hunger

வல்லார்கள் வல்ல வகையாற் றொழில்புரிதல்
எல்லாம் உடனே ஒருங்கிசைந்து — [1]சொல்காலை

முட்டாமற் செய்வினைக்கும் முற்செய்வினைக் குஞ்செலவு
பட்டோலை தீட்டும் படிபோற்றி — நட்டோங்கும்

வல்ல கருணை மறம்

இந்நிலைமை மானுடருக் கேயன்றி எண்ணிலா
மன்னுயிர்க்கும் இந்த வழக்கேயாய் — முன்னுடைய

40. நாள்நாள் வரையில் உடல்பிரித்து நல்வினைக்கண்
வாணாளின் மாலாய் அயனாகி — நீள்நாகர்

வானாடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நானா விதத்தால் நலம்பெறுநாள் — தான்மாள

வெற்றிக் கடுந்தூதர் வேகத் துடன்வந்து
பற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட — இற்றைக்கும்

இல்லையோ பாவி பிறவாமை என்றெடுத்து
நல்லதோர் இன்சொல் நடுவாகச் — சொல்லிஇவர்

செய்திக்குத் தக்க செயலுறுத்து வீர்என்று
வெய்துற் றுரைக்க விடைகொண்டு — மையல்தருஞ்

45. செக்கி னிடைத்திரித்தும் தீவாயி லிட்டெரித்தும்
தக்கநெருப் புத்தூண் தழுவுவித்தும் — மிக்கோங்கு

நாராசங் காய்ச்சிச் செவிமடுத்தும் நாஅரிந்தும்
ஈராஉடன் ஊனைத்தின் என்றடித்தும் — பேராமல்

[1]செல்காலை.

Never fully quenchable, hankers after food;
Verily are the lives goaded to function
In ways manifold their talents befitting;
Duly are their deeds – past, present and future –,
Recorded by the Accomptant, that the souls
May never their consequences escape;
May that Great Moving Finger us protect. (112)

The Witness

The eating of the results of two-fold deeds
Is the rule not merely for mankind but is
Common unto all the embodied lives;
When time comes for lives to quit their bodies
Lives thereform are separated; to lives
That have done deeds righteous, befitting them,
Are offered Heavenly bodies with which
As Māl, Ayan, Lord of Indra-Loka,
And Devās, they dwell in their ordained worlds
And long revel in delights manifold
For fixed periods duly appointed;
Sin-ridden lives which needs must undergo
The results thereof, are brought by servants
Of Yama before their King who eyes them
And questions them thus; "O Sinners! weren't ye
Till this day mindful of birthlessness?"
Then though, in ire, he kindly offers them
Goodly counsel and to his servants, them
Handeth over commanding them to cause the lives
Eat of the consequences of their sins;
Taking leave of their King, they clothe the lives
With Yāthana sarira and cause them
To be pounded in oil-press or in flame
Thrown; or make them embrace pillars of fire,

அங்காழ் நரகத் தழுத்துவித்தும் பின்னுந்தம்
வெங்கோபம் மாறாத வேட்கையராய் – இங்கொருநாள்

எண்ணிமுதற் காணாத இன்னற் கடுநரகம்
பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு – முன்நாடிக்

கண்டு கடன்கழித்தல் காரியமாம் என்றெண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்பறிவார் – மண்டெரியிற்

காய்ச்சிச் சுடவறுக்கக் கண்ணுரிக்க நன்னிதியம்
ஈய்த்துத்தாய் தந்தைதமர் இன்புறுதல் – வாய்த்தநெறி

ஓடியதே ரின்கீழ் உயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவம்இன்றே நீங்குமென – நாடித்தன்

மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்காக
நஞ்சனைய சிந்தை நமன்தூதர் – வெஞ்சினத்தால்

அல்ல லுறுத்தும் அருநரகங் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி – பல்லுயிர்க்கும்

சத்தி பதிக்கும் தரம்

இன்ன வகையால் [1]இருவினைக்கண் நின்றருத்தி
முன்னைமுத லென்ன முதலில்லோன் – நல்வினைக்கண்

எல்லா உலகும் எடுப்புண் டெடுப்புண்டு
செல்காலம் பின்நரகஞ் சேராமே – நல்லநெறி

எய்துவதோர் காலம்தன் அன்பரைக்கண் டின்புறுதல்
உய்யும் நெறிசிறிதே உண்டாக்கிப் – பையவே

[1]இருவினைகள்

Or suffer, them to be pierced in their ears
By rods of flaming iron or have their tongues
Cut off; or compel them eat of their own flesh
Scissored off from their bodies or plunge them
Deep in the horrors of Hell and furhter
With resentment great, engulf them for days
Many many, in cruel Inferno
Causing them thus to work out the results
Of their deeds and then become reformed.

Even as the parents and the kinnery
Of ailing children suffer their ailments
To be diagnosed with care by doctors,
And submit them to painful treatment harsh
Of cauterization of surgery
With heated instruments, or the peeling
Of the film that veils the orbs of their eyes,
And on recovery feel full delighted
And reward them that caused pain and anguish
To their children and even as the Monarch
Who ran his car over his son to purge him
Of his killing a calf caught in his car,
The Lord witnesseth the Hellish tortures
Thrust on lives by Yama's servants angry;
May that Cruel Kindliness, us protect.

The Dispenser of Grace

Thus does the peerless First one than whom there is
None greater, cause the lives to eat of the fruit
Of two-fold deeds and cause them to be born
Times without number, and the lives grow sick

மட்டாய் மலராய் வருநாளில் முன்னைநாள்
மொட்டாய் உருவாம் முறைபோலக் – கிட்டியதோர்

நல்ல பிறப்பிற் பிறப்பித்து நாடும்வினை
எல்லை யிரண்டும் இடையொப்பிற் – பல்பிறவி

அத்தமதி லன்றோ அளவென்று பார்த்திருந்து
சத்தி பதிக்கும் தரம்போற்றி – முத்திதரும்

கொண்டு மகிழும் குணம்

60. நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்நின் றறுத்தருளிப் – பின்அன்பு

மேவா விளங்கும் [1]பிரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப் – பூவலயந்

தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல
முன்நின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை – அன்னவனுக்

காதிகுண மாதலினால் ஆடுந் திருத்தொழிலும்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் – பாதியாம்

பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியும் மதிக்கொழுந்தும் – [2]அச்சமற

65. ஆடும் அரவும் அழகார் திருநுதல்மேல்
நீடுருவ வன்னி நெடுங்கண்ணும் – கேடிலயங்

---

[1]பிரளயாலர் மெய்காணத்.

[2]அச்சமுற.

Of the cycle of birth and death; and when
Time propitious that leads lives far away
From Hell comes to them, showing unto them
The rosy path of the worship of devotees
He grants to them a birth fit for tapas
Which is like unto a bud which will spill
Honey at the hour of efflorescence;
When lives attain to that detached state
Realising well the sourness of two-fold deeds
And are deedless poised like the scales' central pin,
The Lord of their ripeness takes note and to end
Their transmigration pours down His Power
Of Grace into them in fitting measure.
May That Dispenser of Grace, us protect. (178)

The Humaneness Divine

The only malā of Vijnānakala –
Righteous and Mutthi bound –, He will by His
Inly illumination in them snap;
Unto Pralayākala who in love
Abounding flourish, He as the Lord, doth
Manifest, and cures them of their Ānava
And Kanma malas; and to the Sakala
Earthy, He appears in a form that does
Theirs resemble to rid them of their mala
Three-fold; thus He claims them; eternal are
These – His qualities; therefore doth He hold
On to His Dance Divine; concelaing well
His jasper-hued Consort who shares His frame,
The river bound in His hallowed matted locks,
The crescent, the hooded serpent fearsome,
The eye of upward glowing flame in the midst

கூட்டுந் தமருகமும் கோல எரியகலும்
பூட்டரவக் கச்சும் புலியதளும் – வீட்டின்ப

வெள்ளத் தழுத்தி விடுந்தாளி னும்அடியார்
உள்ளத்தி னும்பிரியா ஒண்சிலம்பும் – கள்ளவினை

வென்று பிறப்பறுக்கச் சாத்தியவீ ரக்கழலும்
ஒன்றும் உருத் தோன்றாமல் உள்ளடக்கி – என்றும்

இறவாத இன்பத் தெமைஇருத்த வேண்டிய
பிறவா முதல்வன் பிறந்து – நறவாருந்

தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதனென்று
பேரிலா நாதன்ஒரு பேர்புனைந்து – பாரோர்தம்

உண்டி உறக்கம் பயம்இன்பம் ஒத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி – மிண்டாய

நீதி நிறுத்தும் நிலை

ஆறு சமயப் பொருளும்அறி வித்தவற்றிற்
பேறின்மை எங்களுக்கே பேறாக்கித் – தேறாத

சித்தந் தெளியத் திருமேனி கொண்டுவரும்
அத்தகைமை தானே அமையாமல் – வித்தகமாஞ்

சைவ நெறியிற் சமய முதலாக
எய்தும் அபிடேகம் எய்துவித்துச் – செய்யதிருக்

கண்ணருளால் நோக்கிக் கடியபிறப் பாற்பட்ட
புண்ணும் இருவினையும் போய்அகல – வண்ணமலர்க்

Of His Beauteous forehead, the drum that doth
Sound concord, the flame of light wielded
By His left-hand, the cincture of serpent,
The spotted vestment bright of tiger-skin
Around the hip, the luminous anklets (200)

Which are inseparable from His Feet
That plunge mellowed souls in the blissful flood
Of Mutthi, and the hearts of devotees true;
And the Kazhal yclept Kantāmani
Triumphal, – decked to quell furtive Karma,
And thus snap the cycle of birth and death.
To grant the endless bliss of release to men
Like even unto us, as though the never-born
Is now born, He, sans name, manifests Himself
Bearing the nomen Sambandha Nāthan
Decked with the garland of honied flowers
And doth live happily like the earth-born
Eating, slumbering, fearing and enjoying!
May That Humaneness Divine, us protect. (214)

Upholder of Justice

Unto us he did inculcate the six
Religions eternal and made us all
Clearly perceive the impossibility
Of attainment of blest mutthi through them;
And lo, this knowledge is indeed our boon!
Our beffuddled chittha He clarified
By his divine presence, but not content
With this, He did initiate us in the path
Supreme of Salva wisdom infinite
Beginning with Samaya and ending
In Abhisheka; by his divine look

கைத்தலத்தை வைத்தருளிக் கல்லாய நெஞ்சுருக்கி
மெய்த்தகைமை யெல்லாம் விரித்தோதி – ஒத்தொழுகும்

சேண்ஆர் இருள்வடிவம் செங்கதிரோன் [1]பால்நிற்பக்
காணா தொழியும் கணக்கேபோல – ஆணவத்தின்

ஆதி குறையாமல் என்பால் அணுகாமல்
நீதி நிறுத்தும் நிலைபோற்றி – மேதக்கோர்

கள்ளம் காட்டும் கழல்

செய்யுஞ் சரியை திகழ்கிரியா யோகத்தால்
எய்துஞ்சீர் முத்திபதம் எய்துவித்து – [2]மெய்யன்பாற்

80. காணத் தகுவார்கள் கண்டால் தமைப்பின்பு
நாணத் தகும்ஞான நன்னெறியை – வீணே

எனக்குத் தரவேண்டி எல்லாப் பொருட்கும்
மனக்கும் மலரயன்மால் வானோர் – நினைப்பினுக்குந்

தூரம்போ லேயணிய சுந்தரத்தாள் என்தலைமேல்
ஆரும் படிதந் தருள்செய்த – பேராளன்

தந்தபொருள் ஏதென்னில் தான்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்காக்கி– முந்திஎன்றன்

உள்ளம்என் றும் நீங்கா தொளித்திருந்து [3]தோன்றிநிற்குங்
கள்ளம்இன்று காட்டும் கழல்போற்றி – [4]வள்ளமையால்

---

[1]பால் நிற்பார்.

[2]மெய்யன்பிற்.

[3]தோன்றிநின்ற, தோன்ற நிற்கும்.

[4]வள்ளன்மையால்.

He caused the wound of cruel birth, and deeds
Two-fold vanish; on our head He did place
His beauteous hand flowery and did melt
Our stony heart and did elucidate
Unto us Truth's nature, like recession
Of murk from sky into space at the advent
Of ruddy sun, He, the Just One, did cause
Ānava Mala, though it be deathless,
To cease its ceaseless hold on me henceforth.
May That Holder of Justice, us protect. (235)

The Thievery

Unto those that practise Charya and Kriya
And Yoga, He grants the *patha*-mutthi;
Desiring to grant me – the most unfit one –,
The great boon of Jnānam through which He is
Perceived, which when obtained by devotion
True, causeth its possessor to feel truly
Ashamed of his former self-learnt knowledge,
The sacred beauteous feet that ever lie
Far far away from all beings – Māl, Ayan
And Devās –, but always nigh unto the true,
The Merciful One gave me fittingly
To wear on my crown and shall I speak of
The gift I received from Him? It is that of
Non-difference; no longer is He from me
Different; though sans beginning He is
Present in me and knows it to be so
I have not known of it; this thievery is
This day made known to me by His Feet;
May Those us protect. (254)

காட்டும் செயல்

85. தன்னைத் தெரிவித்துத் தன்றாளி னுட்கிடந்த
என்னைத் தெரிவித்த [1]எல்லையின்கண் – மின்ஆரும்

வண்ணம் உருவம் மருவுங் குணமயக்கம்
எண்ணுங் கலைகாலம் எப்பொருளும் – முன்னம்எனக்(கு)

இல்லாமை காட்டிப்பின் பெய்தியவா காட்டி [2]இனிச்
செல்லாமை காட்டுஞ் செயல்போற்றி – எல்லாம்போய்த்

என் கொண்டு போற்றிசைப்பேன்!

தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருளாகி
எம்மைப் புறங்கூறி இன்புற்றுச் – செம்மை

அவிகாரம் பேசும் அகம்பிரமக் காரர்
வெளியாம் இருளில் விடாதே – ஒளியாய்நீ

90. நின்ற நிலையே நிகழ்த்தி ஒருபொருள்வே
றின் றியமை யாமை எடுத்தோதி – ஒன்றாகச்

சாதித்துத் தம்மைச் சிவமாக்கி இப்பிறவிப்
பேதந் தனில்இன்பப் பேதமுறாப் – பாதகரோ(டு)

ஏகமாய்ப் போகாமல் எவ்விடத்துங் காட்சிதந்து
போகமாம் பொற்றாளி னுட்புணர்த்தி – ஆதியுடன்

நிற்க அழியா நிலைஇதுவே என்றருளி
ஒக்க வியாபகந்தன் னுட்காட்டி – மிக்கோங்கும்

[1]எல்லைக்கண்.

[2]அதிற்.

The Great Revelation

The Munificent One

With abundant affection surcharged
Declared Himself to me and when myself
Revealed He to me, who lay bound to the grace
Of His feet, I began to realise,
My form was ephemeral as lightning
Bright; the 'wilderment by the Gunas caused,
Vivifying Kalā, Kāla and tattvas
Never did belong to my Kevala self;
These were for the Sakala state only;
He also revaled to me the pure state
When, I will be of these fully free;
May That Revelation great us protect. (266)

How to Hymn Him?

'Finding all tattvas to be false we have
Forsaken them all; so we stand clarified;
Other than one's own self there is nothing," –
Thus thinking they back-bite us – Siddhantins
Merrily; not leading us to the darkness
In which are plunged the "Aham Brahm" theorists
Who dare equate themselves with the Changless Brahm,
Thou taughtest me Thy state to be pure light
Of wisdom and the absolute dependence
Of lives on Thee; again thou ledest me not
To the base group of Siva-Samavadhins
Who place themselves on a par with Siva
Not partaking of the bliss of Siva
Totally differing from their own joy;
Preventing my mingling with them, Thou didst
Grant me the sight of Thy presence

ஆனந்த மாக்கடலில் ஆரா அமுதளித்துத்
தான்வந்து செய்யுந் தகுதியினால் – ஊன்உயிர்தான்

முன்கண்ட காலத்தும் நீங்காத முன்னோனை
என்கொண்டு போற்றிசைப்பேன் யான்!

வெண்பா

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றியவன் மெய்ஞ்ஞானப் புண்ணிய நூல் – போற்றி எங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேறாய்வந் துண்ணின்ற
சம்பந்த மாமுனிபொற் றாள்.

In all things everywhere and hadst myself
Merged within the bliss of Thy golden feet
And thus demonstrating union with Thee;
Enveloped my knowledge with Thine wisdom,
Infinite and all-embracing; As You
Sought me and freely gave me the nectar
Of the supreme sea of eternal bliss
I flourish by your mercy protected,
Even in this state of human bondage
In which flesh and life appear to be true;
In my fettered plight too, are You not
O Ancient One, living linked with me?
Can ever my hymn of praise your glory measure! (295)

* * *

Hail sacred Tillai; hail Siva Bhoga,
Hail Sambandha's holy works of wisdom true,
Hail the golden feet of our Saint Sambandha
Which dwelling in us end our life's shackle.

6. நெஞ்சுவிடு தூது

கலிவெண்பா
இறைவனியல்பு

பூமேவும் உந்திப் புயல்வண்ணன் [1]பொற்பதுமத்
தார்மேவும் மார்பன் சதுமுகத்தோன் – தாம்மேவிப்

பன்றியும் அன்னமுமாய்ப் பாரிடந்தும் வான்பறந்தும்
என்றும் அறியா இயல்பினான் – அன்றியும்

இந்திரனும் வானோரும் ஏனோரும் எப்புவியும்
மந்தர வெற்பும் மறிகடலும் – மந்திரமும்

வேதமும் வேத [2]முடிவின்விளை விந்துவுடன்
நாதமுங் காணா நலத்தினான் – ஓத

அரியான் எளியான் அளவிறந்து நின்ற
பெரியான் சிறியான்பெண் பாகன் – தெரியா

அருவான் உருவான் [3]அருவுருவ மல்லான்
மரியான் மரிப்பார் மனத்தான் – பரிவான

மெய்யர்க்கு மெய்யன் வினைக்குவினை யாயினான்
பொய்யர்க்குப் பொய்யாய பொய்யினான் – ஐயன்

படநாகம் பூண்ட பரமன் பசுவின்
இடமாய் நிறைந்த இறைவன் – சுடரொளியான்

---

[1]பொற்பமைந்த நாமேவு மாதுபுணர் நான்முகத்தோன்.

[2]முடிவும்விளை விந்துவுடன்; முடிவும் விளைவிந்து நாதமும்.

[3]அருவுருவமில்லான், அல்லான்.

6. Nenju Vidu Thoothu
(Message through Heart)

The Nature of God

The nimbus-hued Maal of flowery navel
The Four-Faced decked with lotus chaplet golden
As boar and swan, burrowed the earth and winged the sky
But could not of His Nature know; again,
Neither Indra, nor dwellers ethereal
Nor others of all the different worlds,
Nor habitants of Mantra-mountain great,
And billowy seas, nor Mantras, Vedas,
Nor Naada and Vintu–the crown and flower
Of Vedas, His Nature can comprehend.
He who is for ever easy of access
(To the godly) is past both speech and logic;
He is small as He is the subtlest;
His Frame His Consort shares; invisible
He is formless who hath a form as well
And a formless-form too and none of these;
He is the deathless One who is the Life
Of mortals' life; He in sooth is the true One
To the devoutly true; He indeed is the Deed
Behind the deed; unto the false He is
The false one fictitious; He is the Father –
The Lord–God, the dweller in His Flock.

என்றுமுளன் அன்றளவும் யானும் உளனாகி
நின்றநிலை யிற்றரித்து நில்லாமற் – சென்றுசென்று

தோற்றியிடும் அண்டஞ் சுவேதசங்கள் [1]பாரின்மேற்
சாற்றும்உற் பீசஞ் சராயுசங்கட் – கேற்றபிறப்

பெல்லாம் பிறந்தும் இறந்தும் [2]இருவினைகள்
பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன் – கல்லா

உணர்வின் மிசையோ டுலகா யதனைப்
புணர்வதொரு புல்லறிவு பூண்டு – கணையிற்

கொடிதெனவே சென்று [3]குடிப்பழியே செய்து
கடிய கொலைகளவு காமம் – படியின்மிசைத்

தேடி யுழன்று தெரிவைத் தெரியாமல்
வாடி இடையும் மனந்தனக்கும் – நாடிஅது

போனவழிபோகும் புந்திக்கும் புந்தியுடன்
ஆன திறலார் அகந்தைக்கும் – மேனி

அயர [4]அயரும் அழிய அழியும்
உயிரின் துயரம் உரையேன் – வயிரமே

[1]மண்ணின்மேல்.

[2] இருவினையின்.

[3]குடிப்பழுதே.

[4]அயர.

The Nature of Soul

Though I be eternal as the Bright One
I abided not in the abiding state true
But fared forth for ever in transmigration
Of all kinds of birth that are engendered
In ovum, or sweat, or seed, or matrix
And suffered deaths innumerable times;
Even then, the more fool that I really am
For ever bound to eat of the two-fold deeds!
Unschooled, with low knowledge condemned was I
To join the Lokayaths; than an arrow
Faster I sped forth and did evil deeds
That my family to shame did expose;
Heinous murder, larceny, lechery,
I sought after and in them all wallowed;
I'd not seek to know what ought to be known;
Unto the mind forlorn and buddhi errant,
And to arrogance by buddhi begot,
I slaved, grew weary as body wearied,
And did waste as my body wasted, sure;
I know not of my life's sorrows to relate.

கொண்டதொரு காமனுக்கும் கோபனுக்கும் மோகனுக்கும்
மண்டு மதமாச் சரியனுக்கும் – திண்டிறல்சேர்

இந்திரியம் பத்துக்கும் ஈரைந்து மாத்திரைக்கும்
அந்தமிலாப் பூதங்கள் [1]ஐந்துக்கும் – சிந்தைகவர்

மூன்றுகுற்றம் மூன்றுகுணம் மூன்றுமலம் மூன்றவத்தை
ஏன்றுநின்று செய்யும் [2]இருவினைக்குந் – தோன்றாத

வாயுஒரு பத்துக்கும் மாறாத [3]வல்வினையே
யாய கிளைக்கும் அருநிதிக்கும் – நேயமாம்

இச்சை கிரியை யிவைதரித்தங் கெண்ணிலா
அச்சங் கொடுமை யவைபூண்டு – கச்சரவன்

சீரில்நிலை நில்லாது திண்டாடும் பல்கருவி
[4]வாரில்அகப் பட்டு மயங்கினேன் – தேருங்கால்

உன்னை ஒழிய உறவில்லை என்னுமது
தன்னை அறிவை தனியறிவை – முன்னம்

*தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்று – நிலைத்தமிழின்

தெய்வப் புலமைத் திருவள் ளுவர்உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல் – ஐவர்க்கும்

[1]ஐந்தினுக்கும்.

[2]இருவினைக்குத்,

[3]வல்வினையேனாய.

[4]வாரி. *குறள்.

The Nature of Bond

To flint-hearted Lust, Wrath, Passion, Pride, Envy
And to the faculties ten and matras ten,
To the five elements illimitable,
To brain-pervading felony three-fold,
Gunaas three-fold, malaas three-fold and states
Three-fold and to deeds two-fold which all things
Embrace, to the invisible airs ten,
To relations, the very form of deeds two-fold,
And to wealth rare, I slaved and hard did work
Deep immersed in boundless fear and cruelty
Ignoring the pursuit of the path great
That leads to the great God, serpent-cinctured,
But stood plunged, all bewildered in billows
Of buffetting sea of deed-breeding tools;
Dawning wisdom imparts the saving truth
That TRUER KINSMAN than THOU, there is none.
They that really realise this truth, the knowledge
Of life, and the great Being that truly is
The knowledge behind the knowledge of Life
Are the absolutely liberated;
Others in the net of bewilderment
Are entangled sure; thus did speak the poet
Of divine afflatus, Valluvar great.
His words of truth I ignored and did toil
To propitiate full the senses five,
And in this did persist relentlessly
Only to sink deep in the sea of sin;

ஆவனவே செய்தங் கவர்வழியைத் தப்பாமற்
பாவமெனும் பௌவப் பரப்பழுந்திப் – பூவையர்தம்

கண்வலையிற் பட்டுக் கலவிக் கலைபயின்றங்(கு)
உண்மை[1] நிலையுணர்ச்சி ஓராமல் – திண்மையினால்

நாவிற் கொடுமை பலபிதற்றி நாடோறுஞ்
சாவிற் பிறப்பில் தலைப்பட்டிங் – காவிநிலை

நிற்கும்வகை பாராய் நிலையான நெஞ்சமே
பொற்பினுடன் யானே புகலக்கேள் – வெற்பின்மிசை

இறைவன் நிலை

30 வந்திருக்க வல்லான் மதியாதார் வல்அரணம்
செந்தழலின் மூழ்கச் சிரித்தபிரான் – அந்தமிலா

வேத முடிவில் விளைவில் விளைவிலொளி
ஆதி யமலன் நிமலனருட் – போத

அறிவி லறிவை அறியு மவர்கள்
குறியுள் புகுதுங் குணவன் – நெறிகொள்

வெளியில் வெளியில் வெளியன் வெளியில்
ஒளியில் ஒளியில் ஒளியன் – ஒளியில்

அளியில் அளியில் அளியன் அளியில்
அளவில் அளவில் அளவன் – அளவிறந்து

35. நின்றான் அனைத்தும் நிறைந்தான் நினைப்பவர் பாற்
சென்றான் தெரியத் தெரியாதான் – குன்றா

[1]அறிவுணர்ச்சி.

Caught was I by the net of damozels' eyes
Where I learnt the fine art of lechery;
Little knowing the true state I blabbered
Full many a word of cruel import.
For ever in the cycle of birth and death
I involved myself: Behold, O my Heart
The decadent plight of my piteous life!
Now hearken with care to what I relate.

The State of God

He is the One enthroned on the Silver Mount;
His smile of frown did to cinders reduce
The forts of those that respected Him not;
He is the bright Light superne that issues
From the summation of Vedas boundless;
He is the Alpha, the Immaculate;
The One to whom blemish is alien;
He's known only by the knowledge of those
That possess enlightened knowledge divine;
In their bosoms he enters to abide;
He is the One of Space righteous that sustains
The inner space of Space; He is the Light
That lights the light by His Grace begotten;
He is the Gracious One, the Giver of grace
To Grace; immeasurable He doth stand
Pervading all; He's already with them
That think on Him; He is not to be known
By mere knowledge; He is the fadeless One
Of effulgence, the blooming brilliance
All-pervasive; the flame immutable
On earth; the blemishless One invisible

விளக்காய் நிறைந்த விரிசுடரான் [1]மண்மேல்
துளக்காமல் நின்றபெருஞ் சோதி – உளக்கண்ணுக்

கல்லாது தோன்றா அமலன் அகிலமெலாம்
நில்லாமல் நின்ற நிலையினான் – சொல்ஆரும்

ஈசன் பெருமை இருவினையேன் இன்றுனக்குப்
பேசுந் தகைமையெலாம் பேணிக்கேள் – பாசம்

தசாங்கம் – மலை

பலவுங் கடந்து பரிந்தருள்சேர் – பண்பாற்
குலவி விளங்குகுணக் குன்றோன் – இலகவே

ஆறு

செய்ய தருமச் செழுங்கிரியின் மீதிழிந்து
வையம் பரவ [2]மகிழ்ந்தெழுந்தங் – கையம்

களவுபயம் காமம் கொலைகோபம் காதி
அளவில் [3]வினை யெல்லாம் அழித்திங் – குளமகிழத்

தொம்மெனவே எங்கும் முழங்கிச் சுருதிபயில்
செம்மைதரும் ஆகமங்கள் சேர்ந்தோடி – மும்மலத்தின்

காடடங்க வேர்பறித்துக் கல்விக் கரைகடந்தங்(கு)
ஓடுபல் பூதத் துணர்வழித்து – நீடுபுகழ்

மெய்வாய்கண் மூக்குச் செவியென்னப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவா[4] அகற்றி – நையும்இயல்

[1]விண்மேல்.

[2]மகிழ்ந்தெழுந் தையம்.

[3]வினையை யழித்திங்கு.

[4]அழித்து.

Save to the inner eye; the One immanent
And transcendent too; of the ineffable
God's glory, I – fetter'd of deeds two-fold –,
Will relate to you, as in my power
It lies; now I bid thee listen with care.

The Ten Insignia

(1) The Mountain

He is beyond the pale of paasam manifold
And His is the Mountain of Love and Grace.

(2) The River

From the Mountain of Righteousness supreme
Down descends His River, winding its course
To the delight of earthly lives; destroys
Doubt, theft, fear, lust, murder, wrath and effects
Of all the deeds; runs with bosom-thrilling
Sound of "Aum" through Vedas and Aagamas
Grace-abounding; dashes forth uprooting
The thicket of triple malaa and passes
Beyond the shore of scriptures and instruction
To quell experience empirical;
Removes the five-fold passion and desire
Yclept the long-renowned body, mouth, eyes
Nose and ear; wipes out full the weakening
Speech, feet, hands, and organs excretory
And genitals; gushes torrentially
To pull down the irremovable bondage

45. வாக்குப்பா தம்பாணி பாயுருபத் தம்பலவும்
நீக்கிச் செறிந்து நிறைந்தோடிப் – போக்கரிய

பந்தமெனுஞ் சோலை பறித்துப் பரந்தலைக்கும்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் – சிந்திவிழ

மோதி [1]அருணீர்மை ஓங்கிவிறல் முக்குணமுங்
காதி உரோமமெலாங் கைலந்து – சீதப்

புளகம் [2]அரும்பப் புலன்மயக்கம் போக்கி
விளைவில் புலன்முட்ட மேவிக் – களபதன

மாதர் மயக்கம் அறுத்துவளர் [3]மண்டலத்துச்
சோதியொரு [4]மூன்றினையுஞ் சோதித்து – [5]நீதியினால்

50. ஆதாரம் ஆறினுஞ்சென் றாறிஅடல் வாயுக்கள்
மீதான பத்தும் மிகப்பரந்து – காதிப்

பிருதிவிஅப் புத்தேயு வாயுஆ காய
உறுதி நிலமைந்தும் ஓடி – மறுவிலா

நான்முகன்மால் ஈசன் மகேசன் நலஞ்சிறந்த
தான்முகம் ஐந்தாஞ் சதாசிவமும் – ஆனதொரு

விந்துநா தங்கடந்து சுத்த வெறுவெளியில்
அந்தமிலாப் பாழடங்கத் தேக்கியபின் – முந்திவரும்

[1]அலைக்கும் அருணீர்மை முக்குணமும், [2]அரும்பிப், [32]மண்டலத்தின், [4]மூன்றும்,
[5]நீதிபுனை.

Forest-like; and rolls on everywhere to dash
To pieces, by its grace, manam, buddhi
Ahamkar and chittha ever distracting;
On it flows washing three gunaas away;
The confounding of senses ceases as it
Courses with thrill supreme through the human frame
To sever the lust bred by damozels
Whose bosoms boast of sandal-paste fragrant
And to fill the fields of passionlessness;
Forth it proceeds to purify the abodes
Of Sun, Moon and Agni and in justness
Is firm attached to the bases six and spreads
In the realm beyond the ten airs mighty
And higher soars beyond the elements five
To transcend Ayan, Māl, Esa, Mahesa
And Sadaa-Siva and all the tattvas too
Of Naada and Vintu and the fathomless
Zero which it doth subdue and again
Passes beyond the land of knowledge great,
Absorbent of all the innumerables.
(Thus) it grants to souls clarified and from
Doubts freed, its Own Knowledge which is Moksha,
And dwells in all flesh inseparable
And as its own, entering their very lives

அவ்வறிவுக் கப்பாலுஞ் சென்றகண்டம் [1]உள்ளடக்கிச்
செவ்வறிவே யாகித் [2]திகைப்பொழிந்தி ட்– டெவ்வறிவுந்

55. தானாய [3]வீடளித்துத் தன்னிற் பிறிவிலா
ஊனாகி எவ்வுயிர்க்கும் உள்புகுந்து – மேனியிலா

அஞ்சவத்தை யுங்கடந் தாயபெரும் பேரொளிக்கே
தஞ்சமெனச் சென்று [4]தலைப்பட்டு – வஞ்சமறத்

தான் அந்தம் இல்லாத தண்ணளியால் ஓங்கிவரும்
ஆனந்தம் என்பதோர் ஆறுடையான் – [5]ஆனந்தம்

நாடு

பண்ணும் பயன்சுருதி ஆகமங்கள் பார்த்துணர்ந்து
நண்ண அரியதொரு நாடுடையான் – எண்ணென்

ஊர்

கலையால் உணர்ந்து கருத்தறிந்து காம
நிலையான தெல்லாமும் நீத்தங் – கலைவறவே

60. தேட்டற்ற சிந்தை சிவஞான மோனத்தால்
ஓட்டற்று வீற்றிருக்கும் ஊருடையான் – நாட்டத்தால்

---

[1]உள்ளாக்கச், [2]திகைப்பொழிந்தங் கெவ்வறிவும், [3]வீடருள, [4]தலைப்பெய்தி,
[5]வானந்தம் பண்ணின்

Like the coursing beyond the five bodily states
Towards the great sempiternal haven
Of ever-lasting effulgence great, doth run
His River of Bliss the stream, Grace-abounding,
Perpetual coolth, from deception free.

(3) The Country

Comprehension and practice of Sruti
And Aagamas lead to perennial bliss
Which is His Country inaccessible.

(4) The Town

His Town is the dwelling of such souls which
Learning by mastery of arts, eight times eight,
Have cut asunder the source of all desires;
Placid remains their Chinta in Silence
Unique of Siva-Gnānam soused for ever.

தார்

தெண்ணீ ரருவிவிழச் சிந்தைமயக் கந்தெளிந்து
உண்ணீர்மை [1]யெய்த உரோமமெலாம் – நண்ணும்

புளகம் புனைமெய்யர் பொய்யிற்கூ டாமல்
உளகம்பங் கொண்டுள் உருகி – அளவிலா

மாலா யிருக்கு மவர்மனத்தை வாங்கஅருள்
மேலாய் விலங்கலங்கல் மெய்யினான் – தோலாத

குதிரை

வானம் புவனம் மலைகடல்ஏழ் பாதாளம்
ஊன்ஐந்து பூதத் துயிருணர்ச்சி – ஞானமாய்

65. எல்லாமாய் அல்லவாய் எண்ணுவார் [2]எண்ணத்து
நில்லாமல் நிற்கும்நீள் வாசியான் – சொல்ஆரும்

யானை

பாதாளம் ஊடுருவிப் பாரேழும் விண்ணேழும்
ஆதார மாகி அகண்டம்நிறைந் – தோத

அரிதாய் எளிதாய் அருமறையா றங்கத்
துருவாய் உயிராய் உணர்வாய்ப் – பெரிதாய

வெய்யதுயர்ப் பாசமற வீசியே வெம்பிறவித்
துய்ய கடலைத் துகளெழுப்பி – ஐயமுறுங்

[1]எய்தி, [2]எண்ணத்தில்,

(5) The Garland

A flood of tears bred by love cascades from
The eyes of devotees; their Chinta
Is serene, of confounding doubts well-cleared;
Theirs is realisation; constantly thrilled
Their bodily hairs stand ever erect;
Of falsehood they will have none; their hearts true
Atremble melt with love unbounded for Him;
The great Grace that draws these hearts is His Garland.

(6) The Horse

His is the Horse which abides recondite
In the thought of those thinkers who reside
Beyond the dark realm of space, universe,
Mountains, seas, under-worlds – all seven-fold,
Transcending the five organs, the elements,
Life and feeling; they are knowledge, and are
All things as well as the reverse thereof.

(7) The Elephant

Penetrating beyond the nether worlds
By rare words pictured, it is the support
Of seven-fold–middle and upper–, worlds;
Is ineffable and effable and is of
The form, life and soul of Vedas and six
Angaas; it quells the vast cruel sorrowing
Paasam and smites the sea of birth to turn
Dustily dry; again it doth fiercely scorch

காமக்[1]குரோதலோப மோகமதங் காய்ந்தடர்த்துச்
சாமத் தொழிலின் தலைமிதித்து – நாமத்தாற்

கத்துஞ் சமயக் கணக்கின்விறற் கட்டறுத்துத்
தத்தம் பயங் [2]கொலைகள் ஆங்கழித்தே – தத்திவரும்

பாசக் குழாத்தைப் படஅடித்துப் பாவையர்தம்
ஆசைக் கருத்தை அறவீசி – நேசத்தால்

ஆனவே கங்கொண் டருள்மும் மதத்தினால்
ஊனையார் தத்துவங்க ளுள்புகுந்து – தேனைப்

பருகிக் களித்துயர்ந்து பன்மறைநாற் கோட்டால்
மருவித் திகழ்ஞான ஆனையான் – இருமுச்

கொடி

சமையங் கடந்து தனக்கொப் பிலாது
சுமைதுன்பம் நீக்குந் துவசன் –கமையொன்றித்

முரசு

தம்மை மறந்து தழலொளியுள் ளேயிருத்தி
இம்மை மறுமை இரண்டகற்றிச் – செம்மையே

வாயுவை ஓடா வகைநிறுத்தி வானத்து
வாயுவையும் அங்கே யுறஅமைத்துத் – [3]தேயுவால்

என்றும் ஒருதகைமை யாயிருக்கும் இன்பருளே
நின்று முழங்கும் நெடுமுரசோன் – அன்றியும்

[1]குரோதமதமாச்சரியங், [2]கொலையை ஆங்கழித் தெத்தி வரும், [3]தேயுவுற.

Doubt-breeding lust, anger, miserliness,
Moham and *madam* and extirpates action
Which causes the cycle of birth and death;
It does away with the false theories
Of all the vociferous religions;
Utterly extirpates fear and murder;
It speeds dripping ichor of grace divine
Into the grove of tattvas and feeds on bliss
Of honey with delight; the Vedas four
It doth wear as its two pairs of bright tusks;
It is the Tusker of Divine Gnosis.

(8) The Banner

His Banner non-pareil wafteth beyond
The religions six and clears the world
Of its burthensome misery immense.

(9) The Drum

Quelling the rebellious flesh they do
Worship the First One in their enthroned hearts;
They are oned with Him and are immune from
Births future; by yogic process they stay
The straying airs in their bodies; the wind
Ethereal too they detain and cause the glow
Of flame ever uniform and achieve bliss.
Of the sound of their lives is wrought His drum.

ஆணை

மாலும் அயனும் வகுத்தளித்த வையமெலாஞ்
சாலும்அதற் கப்பாலும் எப்பாலும் – மேலை

உலகும் உலகால் உணரவொண்ணா ஊரும்
இலகி நடக்கும்எழில் ஆணையான் – அலகிறந்த

இறைவன் பெருமை

காட்சியான் காட்சிக்குங் காணான் கலைஞான
ஆட்சியான் ஆட்சிக்கும் ஆயினான் – சூட்சியான்

பாருந் திசையும் படரொளியா லேநிறைந்தான்
தூருந் தலையுமிலாத் தோன்றலான் – வேராகி

வித்தாகி வித்தின் [1]விளைவாகி மேவுதனுச்
சத்தாதி பூதங்கள் தானாகிச் – சுத்த

வெறுவெளியாய்ப் பாழாய் வெறும்பாழுக் கப்பால்
உறுபொருளாய் நின்ற ஒருவன் – பொறியிலியேன்

ஞானாசிரியன்

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனியென் தம்பிரான் – அம்புவியோர்

போற்றுந் திருவடியென் புன்தலைமே லேபொறித்தோன்
ஏற்றின் புறந்தமைந்த எங்கோமான் – சாற்றுவார்

சாற்றும் பொருளான் தனிமுதல்வன் தானல்லால்
வேற்றின்பம் இல்லா விளக்கொளியான் – போற்றுங்

[1]முளையாகி.

(10) The Fiat

In all the worlds created and sustained by
Ayan and Maal, beyond them and everywhere,
In the upper worlds and in the city
Of grace unperceivable, reigns His Fiat.

God's Greatness

He is of boundless knowledge; yet He is
Not to be seen by mere knowledge; He rules
Over the realm of all arts and knowledge
By sense utterly incomprehensible;
A subtle Trickster is He who fills the worlds
And all the cardinal points with His light;
He's the One beginningless and endless;
He stands as the root of all, the seed as well;
He is that which germinates from the seed;
He is the body and the *tanmatras*.
The elements and the pure space of Zero,
The void and the things beyond the mere void.

Gnaana Acharya

Unto me the senseless one He granted
Heaven, my fall into the cruel wave-tossed
Sea of birth averting; He is my Lord!
The Saint great Sambandhan! His blessed feet
Worshipped by all, He planted on my poor crown;
My King is He; the Rider of the Bull;
He's the meaning of the words of the wise;
The First One beyond compare; self-effulgent;
He needeth no happiness from without.

குருவேட மாகிக் குணங்குறியொன் றில்லாப்
பெருவேட மாய்நிறைந்த பெம்மான் – கருவேடங்

கட்டுமுருக் கட்டறுத்தான் கற்றவர்வாழ் தில்லையான்
எட்டுமவர்க் கெட்டா இயல்பினான் – மட்டவிழ்தார்

மல நீக்கம்

வானோன் பவனி வரக்கண்டு வல்வினையேன்
ஏனோரும் ஏத்துதல்கண் டேத்தினேன் – தான்என்னைப்

90. பார்த்தான் பழையவினைப் பஞ்சமலக்கொத்தையெல்லாம்
நீத்தான் நினைவுவே றாக்கினான் – ஏத்தரிய

தொண்ணூற் றறுவர்பயில் தொக்கிற் றுவக்கறுத்தான்
கண்ணூறு தேனமுதங் காட்டினான் – வெண்ணீறும்

வேடமும் பூசையுமே மெய்யென்றான் பொய்யென்றான்
மாடையும் வாழ்க்கை மனயுமே – நாடரிய

அஞ்செழுத்தின் உள்ளீ டறிவித்தான் அஞ்செழுத்தை
நெஞ்சழுத்தி நேய மயலாக்கி – அஞ்செழுத்தை

உச்சரிக்குங் கேண்மை யுணர்த்தி [1]அதன் உச்சரிப்பு
வைச்சிருக்கும் அந்த வழியாக்கி – அச்சமறச்

95. சென்று விளக்கை எழத்தூண்டிச் [2]செஞ்சுடரின்
ஒன்றி ஒருவிளக்கின் உள்ளொளியாய் – நின்ற

பெருவிளக்கின் [3]பேரொளியாய் உள்ளே பிரசம்
மருவும் மலர்போல் மதித்தங் – கருவினுருக்

[1]உணர்த்தியபின், [2]செழுஞ்சுடர்பால், [3]பேரொளியனுள்ளே.

In the hallowed form mighty of Guru
Sans gunaa or mark he stood, the great Lord!
He did snap the bondage, the cause of birth;
He abides in Tillai where dwell the learned,
To mere intellect inaccessible.

The Abolition of Mala

He the Lord ethereal came in procession;
I adored Him, seeing others Him adore;
He threw his eyes on me; in that instant
Abolished was the bunch of my malaa
Five-fold, and He transformed my very thought
Uprooting the tattvass – six and ninety,
Hard to narrate; to me my inner spa
Of honied ambrosia, he did reveal
And demonstrate that the sacred ashes white,
The form of Siva's devotee and worship
Of Siva alone to be true; 'Riches
And life domestic are false', he declared;
He did inculcate the inner content
Of the Pentad of Syllables sacred
And how to chant and count and meditate
On it; He taught me to look within too
Fearless, and trim the inner taper aflame
And merge with the inly light of that lamp.
Bright with boundless effulgence beautiful;
Thus abides the Lord like honey in bloom;
He is to be contemplated even so;
He showed me His light wrought of grace sans form

கொள்ளா அருளைக் கொளுத்திக் குணங்குறியொன்
றில்லா இடத்தே இளைப்பாற்றி – விள்ளாத

உள்ளம் முதலாக உள்ளதெலாம் வாங்கஅருள்
வெள்ள மயலளித்து மேவினான் – கள்ளம்

மறப்பித்தான் மெய்ஞ்ஞான மாக்கிமன மெல்லாம்
இறப்பித்தான் என்பிறவி ஈர்த்தான் – விறற்சொல்லுக்

100. கெட்டானை யார்க்கும் எழுதா இயற்குணங்கள்
எட்டானை ஆற்றா எழுத்தினான் – மட்டாரும்

பாடலார் ஆடலார் பண்பலார் நண்பலார்
[1]ஆடலா ராடல் அகன்பதியாம் – கூடலார்

காணக் கிடையாதான் காண்பார்க்குக் காட்சியான்
பாணர்க் கிலகு பலகையிட்டான் – சேணிற்

சிறந்த உருவான் திருமாலுக் கெட்டான்
நிறைந்த திருவுருவில் நிற்போன் – கறங்குடனே

சூறைசுழல் வண்டு சுழல்கொள்ளி [2]வட்டமெனு
மாறு கருணையினால் மாற்றினான் – நீறணிந்த

105 மெய்யன் நிமலன் அமலன்அருள் வீடளிக்கும்
ஐயன்அறி வுக்கறி வாயினான் – பொய்யர்பாற்

பொய்மையாய் நின்றான் புரிந்தவர்தம் [3]நெஞ்சத்து
மெய்மையாய் நின்று விளங்கினான் – கைமமுவன்

[1]பாடலா ராடலா ரும்பணியான், [2]வட்டமென மாறில், [3]நெஞ்சத்துள்.

And in an arcane place sans gunaa or mark
Bade me rest; my life and all He did
Unto Himself draw and with me did mate
In a flooding grace of intoxication;
He made me forget my thievery and did
Transform my knowledge into wisdom true;
He made me lose my I-ness and My-ness;
My cycle of birth and death he snapped;
He is past speech; He's inaccessible
To any, howsoever great he be; He is
Of divine attributes eight-fold; He is
The Wielder great of the letter matchless.
He is the Songster great and Dancer grand;
He abides in Koodal with a vast court endowed;
He is not to be seen by the frivolous,
The unfriendly and the fippant; He is
The sight of the seer; from Him the Paanar
A gift of seat wrought of wood did receive;
More incarnadine than russet sun-set
Is He who is beyond Maal's prehension;
All things He fills with His Omnipresence;
By His grace He snapt the cycle of birth
And death, ever revolving like the fan,
Simoon, beetle and rotating wheel of fire.
He is the falsity of the false ones;
He is the embosomed truth of them who know;
His hand doth wield the axe; oh my Bosom!
Hearken attentively now to the course
Of the journey to the Father's abode.

காணுமிடம்

அத்தன்பால் நீசென் றடையும் இடத்தையெலாம்
சித்தஞ்சேர் நெஞ்சமே செப்பக்கேள் – நித்தலுமே

பூசிமுடித் துண்டுடுத்துப் பூங்குழலார் தங்கலவி
ஆசைதனிற் பட்டின்ப ஆர்கலிக்குள் – நேசமுற

நின்று திளைக்கும் இதுமுத்தி யல்லது[1]வே
றொன்று திளைக்கும் அதுமுத்தி – [2]யன்றென்(று)

இலகா இருளலகை போல்இகலே பேசும்
உலகா யதன்பால் உறாதே – பலகாலும்

தாம்பிரமங் கண்டவர்போல் தம்மைக்கண் டாங்கதுவே
நான்பிரமம் என்பவர்போல் நண்ணாதே – ஊன்தனக்குக்

கொன்றிடுவ தெல்லாங் கொலையல்ல என்றுகுறித்(து)
என்றும்றே மேதெய்வம் என்றென்று – வென்றிப்

பொறையே யெனும்புத்தன் பொல்லாத புன்சொல்
மிறைஅய விரும்பி விழாதே – நிறைமேவி

வாழ்பவர்போல் [3]மன்னுடம்பில் மன்னும்உரோ மம்பறித்துத்
தாழ்வுநினை யாதுதுகில் தான் அகற்றி – ஆழ்விக்கும்

அஞ்சும் [4]அகற்றும் அதுமுத்தி என்றுரைக்கும்
வஞ்சமணன் பாழி [5]மருவாதே – [6]செஞ்சொல்புனை

[1]வேறின்று, [2]யென்றென்று, [3]மண்ணுலகில், [4]அடக்கும், [5]மதியாதே,
[6]செஞ்சொலால்

The Goal

With each dawning day, himself he perfumes
Gormondises, wears vestment velveteen
And longs to be soused in the merry sea
Of sexy chits of flower-decked locks
And maintains that this life Epicurean
Is indeed mukti; other joys aren't mukti.
Like a devil of darkness he doth lie;
Beware him, the Lokayath; go not near him;
Go not near them who not having seen the Lord
But only themselves, give out; "I am Brahm";
Be not trapped by the doctrine Buddhistic
Which says: "It is no slaughter to eat the slaughtered;
The only Deity sure is righteousness,
And right conduct is nothing but patience."
With contentment false, they pluck their bodies' hairs
And discard shamelessly their accoutrement;
They maintain that mukti is controlling
The senses five; go not near these deceptive Jains.
Believe not as true, the words of the Brahmins
Who chant hoary Vedas of goodly words
Composed, but know not their import or use.
Shun the base who in their hearts do contemn
God-given ashes and God's own Temple;

ஆதிமறை ஓதி அதன்பயன்ஒன் றும்அறியா
வேதியர்சொல் மெய்யென்று மேவாதே – ஆதியின்மேல்

உற்றதிரு நீறுஞ் சிவாலயமும் உள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே – நற்றவஞ்சேர்;

வேடமுடன் பூசைஅருள் மெய்ஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடி மயங்காதே – நீட

அழித்துப் பிறப்ப தறியா தரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே – விழித்தருளைத்

தூது

120. தந்தெம்மை ஆண்டருளுஞ் சம்பந்த மாமுனிவன்
அந்தங் கடந்தப்பா லாய்நின்றோன் – எந்தைபிரான்

வீற்றிருக்கும் ஓலக்கம் எய்திஅடி வீழ்ந்திறைஞ்சிப்
போற்றி சயசய போற்றியென – ஆர்த்தகரி

அன்றுரித்தாய் நின்பவனி ஆதரித்தா ரெல்லாரும்
வென்றிமதன் அம்புபட வீழ்வரோ – நின்றிடத்து

நில்லாத செல்வம் நிலையென் றுனைநீங்கிப்
பொல்லா நரகிற் புகுவரோ – பல்லோரும்

கத்துஞ் சமயக் கணக்கிற் படுவரோ
சித்தம் பலகால் திகைப்பரோ – முத்தம்

125 பொருத நகைமடவார் புன்கலவி யின்பம்
மருவி மயங்கி வருவரோ – இருபொழுதும்

Befriend not fools who have little regard
For the true form of tapas, worship, grace,
And knowledge true; shut thine eyes on them all
Who adore dying gods and hate Siva.

The Message

His eyes cast looks of grace on us and thus
Rule us; He is the great saint Sambandhan;
He is the Beyond that lives beyond the End;
Hie unto His Court, before Him prostrate,
Adoringly hail Him high and wish Him
Victory eternal and praise Him thus:
"You once did peel the skin of the warring mammoth!
Will those who eyed Thee in Thy procession
Be stung by the arrows of Manmathan?
Will they think on wealth fleeting and flee Thee
To wallow in Hell cruel? Or will they
Be trapped by religions vociferous?
Will they stand confounded many a time?
Will they be witched by the dames whose bright teeth
The pearl do excel and be thus fuddled
By lewd desire for union with them?
Will they both day and night take notes of what
The stars twenty-seven and planets nine
Foretell? O great One whose Eye to cinders
Did Manmathan reduce! Setting her mind
On the sea of bliss, the damsel hath clean
Forgotton her own self; You must rid her
Of her sorrows." Say thus and beg of Him
Grant her His roseate feet of lotus;
So praying, beseech Him adoringly

நாள் இருபத் தேழும் நவக்கிரக மும்நலியுங்
கோள்இதுவென் றெண்ணிக் குறிப்பரோ – வேளை

ளித்த விழியாய்நின் இன்பக் கடற்கே
தரித்து மதிமறந்த தையல் – வருத்தமெலாந்

தீராய் எனஉரைத்துச் செங்கமலப் பூந்திருத்தாள்
தாராய் எனப்பலகால் தாழ்ந்திறைஞ்சி – ஏர்ஆரும்

பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
ஈங்கொன்ற வாராய்! இனி.

வெண்பா

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவன் தார்வாங்கி – அம்புந்தும்
வஞ்சமே வும்விழியார் வல்வினையெல் லாம்அகல
நெஞ்சமே வாராய் நினைந்து.

Again and again; from Him His chaplet
Of cassia get; extol Him and of Him take
Leave to come back and live with me for ever.

* * *

To rid the deeds begotten by damsels
Whose eyes deceptive pierce like arrows.
O my Bosom! fare forth to fetch the garland
Of the great Saint Sambandhan who averted
My fall into painful transmigration
And come back filled with memoried bliss.

சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர்
தி.ந. இராமச்சந்திரன் சதாபிஷேக வெளியீடு